
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1231

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

தமிழ்.கா.அமுதரசன்

61

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

# விவசாயத்துக்கு விலையில்லா மின்சாரம்...



# உழவர்கள் வாழ்வின் ஒளி!

**2021**-ஆம் ஆண்டு கழகத்தின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த மிக முக்கியமான வாக்குறுதி, 'மின் இணைப்பு கோரி விண்ணப்பித்துக் காத்திருக்கும் அனைத்து விவசாயிகளுக்கும் உடனடியாக இலவச மின் இணைப்பு வழங்கப்படும்' என்றது. சொல்வதைச் செய்யும் கழகம், சொன்னதுபோலவே ஆட்சிக்கு வந்தபின் அந்த வாக்குறுதியை நிறைவேற்றியது.

2021-ஆம் ஆண்டு, கழகம் ஆட்சி பொறுப்பேற்கும்வரை, அதற்கு முன் 10 ஆண்டுகளாக விவசாய பம்பு செட்டுகளுக்கு இலவச மின்சார இணைப்பு வழங்கப்படாமல், நிலுவையில் இருந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை சுமார் 4.5 இலட்சம். முதலமைச்சராக நம் கழகத் தலைவர் பொறுப்பேற்ற பின், பத்தாண்டுகளாக நிலுவையில் இருந்த அனைத்து விண்ணப்பங்களுக்கும் தீர்வுகாணும் வகையில், முதற்கட்டமாக 'ஒரு இலட்சம் விவசாய மின் இணைப்புத் திட்டம்' என வழங்கி உத்தரவிட்டார். குறிப்பாக, 2021-22 நிதியாண்டின், ஆறு மாத காலத்திற்குள் 1,00,000 விவசாயிகளுக்கு புதிய மின் இணைப்புகளை வழங்கி, திராவிட மாடல் அரசு சாதனை படைத்தது.

எரிசக்தி துறையின் 2021-2022-ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில், மாநிலத்தின் விவசாய உற்பத்தியினைப் பெருக்கி, விவசாயிகளின் நலனை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஒரு இலட்சம் புதிய விவசாய மின் இணைப்புகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

சொன்னதுபோலவே, தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக அதுவரையிலும் இல்லாத அதிகபட்ச அளவாக, ஒரு இலட்சம் விவசாய மின் இணைப்புகள் வழங்க முடிவெடுக்கப்பட்டு, நம் கழகத் தலைவர் அவர்கள் 23.9.2021 அன்று தொடங்கி வைத்தார். இந்தத் திட்டம் 3,025 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்பட்டது. அவர் தொடங்கி வைத்த ஆறே மாதத்தில், ஒரு இலட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது.

அதனைத் தொடர்ந்து, எரிசக்தி துறையின் 2022-23-ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில், தமிழ்நாட்டில் விவசாய உற்பத்தியைப் பெருக்கவும், விளைநிலங்களின் பரப்பை அதிகரிக்கவும் மற்றும் விவசாயிகளின் நலனை மேம்படுத்தும் நோக்கத்துடனும் நடப்பு நிதியாண்டில் 50,000 எண்ணிக்கையில் புதிய விவசாய இலவச மின் இணைப்புகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்புக்கு ஏற்ப, விவசாயிகளுக்கு 50,000 கூடுதல் மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்தை, 11.11.2022 அன்று கரூர் மாவட்டம், அரவக்குறிச்சியில் தொடங்கி வைத்தார் அன்றைய முதலமைச்சர், நம் கழகத் தலைவர். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற விழாவில், விவசாயிகளுக்குக் கூடுதல் மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்து, உரையாற்றினார்.

அவரது உரையில், "தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் சார்பில், தமிழ்நாட்டின் விவசாயிகளை மகிழ்விக்கும் வகையில், 'ஓர் ஆண்டில் ஒரு இலட்சம் புதிய மின் இணைப்புகள் வழங்குவோம்' என்று ஏற்கெனவே அறிவித்தோம். அப்போது, எல்லோரும் என்ன நினைத்தார்கள் என்றால், இது நடக்குமா, சாத்தியமா, முடியுமா? என்று பலரும் கேள்வி எழுப்பினார்கள்.

> இந்தியாவிலேயே முதன்முதலாக விவசாயிகளுக்காக 'மின்சாரம் இலவசம்' என்று கொண்டு வரப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டம் அது. சாத்தியமாக்கியவர் தமிழ்நாட்டின் 'தொலைநோக்குச் சிற்பி' முத்தமிழறிஞர் கலைஞர்.

### நடக்குமா, சாத்தியமா, முடியுமா?

நடக்குமா என்று கேட்பதை நடத்திக் காட்டுவதும் - சாத்தியமா என்று கேட்பதை சாத்தியமாக்குவதும், முடியுமா என்பதை முடித்துக்காட்டுவதும்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. இதை யாரும் மறந்துவிட வேண்டாம். இனிமேல் அப்படி ஓர் எண்ணம், ஒரு சந்தேகம் யாருக்கும் வர வேண்டாம் என்று நான் நினைக்கிறேன்.

ஏற்கெனவே, ஒரு இலட்சம் மின் இணைப்புகளை வழங்கிய நிலையில், இப்போது கூடுதலாக ஐம்பதாயிரம் இணைப்புகளையும் நானே இங்கே வழங்கி இருக்கிறேன். இதன் மூலமாக ஒன்றரை இலட்சம் விவசாயிகள் பயனடைய இருக்கிறார்கள். அவர்கள் மூலமாக தமிழ்நாட்டுக்கு எவ்வளவு உணவுப் பொருள்கள் கிடைக்கப் போகின்றன என்பதை நினைத்தாலே, எனக்குப் பெருமையாக இருக்கிறது, எனக்கு மட்டுமல்ல, உங்களுக்கும் அது மகிழ்ச்சியாக இருக்கும்.

இந்த நேரத்தில் நம்முடைய மறைந்த தலைவர் கலைஞர் அவர்களை நான் நினைத்துப் பார்க்கிறேன். ஏனென்றால், முதன்முதலில் இந்தியாவிலேயே விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தை உருவாக்கித் தந்தவர் நம்முடைய முதல்வராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள்தான். 1989-90-ஆம் ஆண்டில் அதைத் தொடங்கி வைத்தார்" எனக் கடந்த கால வரலாற்றை நினைவுகூர்ந்தார்.

"சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்" என்ற கலைஞரின் வாக்கிற்கிணங்க, தேர்தல் அறிக்கையில் சொன்னபடி, ஆட்சிப் பொறுப்பேற்ற ஓராண்டு காலத்திற்குள் ஒன்றரை இலட்சம் விவசாயிகளின் மின்சாரக் கனவை நனவாக்கினார் கழகத் தலைவர். இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட மூன்றரை ஆண்டுகளில் 2.19 இலட்சம் புதிய விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டன. குறிப்பாக, 2021-இல் இருந்த சுமார் 4.52 இலட்சம் காத்திருப்புப் பட்டியலில், பெரும்பாலான விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்பட்டன.

இந்த மின் இணைப்புகள் வழங்கப்பட்டதன் மூலம் டெல்டா மாவட்டங்கள் மட்டுமன்றி தமிழ்நாடு மாநிலம் முழுவதும் உள்ள சிறு, குறு விவசாயிகள் பெரும் பயனடைந்துள்ளனர். இப்படிப் பாசன வசதி அதிகரித்துள்ளதன் மூலம், தமிழ்நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்கவும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் வழிவகை செய்தது, நம் திராவிட மாடல் அரசு. குறிப்பாக, விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றி, தமிழ்நாட்டை வேளாண் உற்பத்தியில் முதன்மை மாநிலமாக மாற்றுவதில், இந்த இலவச மின் இணைப்புத் திட்டம் ஒரு மகுடமாகத் திகழ்கிறது.

அந்தத் திட்டத்தைத் தொடங்கியது முதல், எல்லாக் காலத்திலும் உணவுப் பொருள் விளைவித்து, தமிழ்நாட்டு விவசாயப் பெருமக்கள் தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, தமிழ்நாட்டின் வளத்தையும் பெருக்கியுள்ளனர். இந்தியாவிலேயே முதன்முதலாக விவசாயிகளுக்காக 'மின்சாரம் இலவசம்' என்று கொண்டு வரப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டம் அது. சாத்தியமாக்கியவர் தமிழ்நாட்டின் 'தொலைநோக்குச் சிற்பி' முத்தமிழறிஞர் கலைஞர். அன்றும், இன்றும், என்றும் கலைஞரின் பெயரைச் சொல்லிக்கொண்டிருக்கும், அதற்குப் பின்னால் ஒரு போராட்டம் உள்ளது. அதை வெற்றிகரமாகச் செயல்படுத்தியதில் பல போராட்டங்கள் உள்ளன.

...தொடரும்

## என் உயிரினும் மேலான இஸ்லாமிய உடன்பிறப்பே!




இந்தியாவில் மற்றெந்த மாநிலங்களை விடவும், இஸ்லாமியச் சமூகம் அமைதியாகவும், வாழ்வாதாரப் பாதுகாப்புடனும் வாழும் தனித்துவமான மாநிலம் தமிழ்நாடு. அந்தத் தனித்துவமான பண்பைச் சமூகத்தில் வளர்த்தெடுத்த இயக்கம் திராவிட இயக்கம். பெரியார், அண்ணா, கலைஞர் காலந்தொட்டு அந்தப் பண்பு நீண்டு வளர்ந்திருக்கிறது. குறிப்பாக, 'இஸ்லாமோ போபியோ'வுக்கு எதிராக ஒவ்வொரு காலகட்டத்திலும், ஒவ்வொரு சிக்கலிலும் தனது உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி, ஒட்டுமொத்த இஸ்லாமியச் சமூகத்தின் தோழனாக உயர்ந்து நின்றவர் முத்தமிழறிஞர் கலைஞர். இஸ்லாமியர்களுக்கு எதிராகக் கட்டமைக்கப்பட்ட பல்வேறு பிரச்சினைகளில், அவர்களை அரவணைத்து, அன்பைப் பொழிந்த கலைஞரின் உரைகளை, 120 பக்கங்களில் நூலாகத் தொகுத்திருக்கிறார் ஆய்வாளர் ஹெச்.இ.அனீஷ் பாத்திமா.

'என் உயிரினும் மேலான இஸ்லாமிய உடன்பிறப்பே' என்ற தலைப்பில், வெளிவந்துள்ள இந்த நூலில், 'தியாகராய நகர் திடீர் பிள்ளையார்', 'ஆம்பூர் விவகாரம்', 'அயோத்தி சிக்கல்' என முக்கிய விவகாரங்களில் கலைஞர் மற்றும் தி.மு.கழகத்தின் நிலைப்பாடுகள், அரசாக மேற்கொண்ட நடவடிக்கைகளை வெளிப்படுத்திய உரைகள் இடம்பெற்றுள்ளன. தி.மு.க.வுக்கும் முஸ்லிம்களுக்குமான உறவு, மத நல்லிணக்கத்தைக் காக்க வெளிப்படுத்திய பண்பு, காயிதே மில்லத் தி.மு.க.வுடன் கட்டிக்காத்த நட்பு எனப் பலவற்றையும் அலசுகிறது இந்த நூல்.

சிறுபான்மைச் சமூகங்களின் நிரந்தர தோழன் யார் என்பதை, இன்றைய இளம்தலைமுறையும் அறிந்துகொள்ள உதவும் இந்நூலை 'திரவிடியன் ஸ்டாக்' பதிப்பகம் வெளியிட்டுள்ளது. விலை ரூ.150. நூலைப் பெற: 9092787854 எண்ணுக்கு அழைக்கலாம்.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவருடன் வீரவணக்க நாளில்...



சு.வெங்கடேசன்

2012-ஆம் ஆண்டு, காஞ்சிபுரம் நகரத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம், ஜனவரி 25 அன்று நடைபெற்றது. கூட்டத்திற்கு வருகை தந்த தலைவர் அவர்களுடன், அப்போது, செவிலிமேடு பேரூர் கழகச் செயலாளராக இருந்த நான், புகைப்படம் எடுத்துக் கொண்டேன். வீரவணக்க நாளில் எடுத்துக் கொண்ட இந்தப் படம், எனக்குப் பல உணர்வுகளைத் தரக்கூடியது.

– சு.வெங்கடேசன்,
4-வது பகுதிச் செயலாளர்,
காஞ்சிபுரம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### ஒழிந்த 'ஆகாஷ்வாணி'!

1967-ஆம் ஆண்டு, கழகம் ஆட்சிப் பொறுப் பேற்றதும், "தமிழ்நாட்டில் சென்னை, திருச்சி, திருநெல்வேலி, கோவை ஆகிய இடங்களிலுள்ள வானொலி நிலையங்கள், 'வானொலி' என்ற தமிழ்ப் பெயரையே பயன்படுத்தும். அதுவரை பயன்படுத்தப்பட்டு வந்த 'ஆகாஷ்வாணி' என்ற பெயர் ஒழியும்" என 9.5.67-இல் அறிவிக்கப்பட்டது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900